தேசிய திருவிவிலிய வினாடி வினா – 2026 (முதல்)

# கடவுள், உடன்படிக்கைசெய்பவரும்



## திருஅவைத் தலைவரும்

## பிரிவு தரம் 8 & 9

தேசிய மறைக்கல்வி நடுநிலையம்

# திருவிவிலிய வினாடி வினா - அட்டவணை

## தரம் 8 - கருப்பொருள்

# உடன்படிக்கையாளரான கடவுள்

| தலைப்பு | பிரதான இறைவார்த்தை பகுதி | கற்றல் பெறுபேறு | மேலதிக வசனங்கள் | ஏன், காரணம் |
|---|---|---|---|---|
| ஏதேன் தோட்ட உடன்படிக்கை | தொ.நூ. 39:15,21 | பாவத்திற்கு/வீழ்ச்சிக்கு பின்னரான கடவுளின் முதலாவது மீட்பின் வாக்குறுதியை கற்றுக்கொள்வர். | தொ.நூ. 3:15<br>தி.பா. 25:10<br>எபி. 8:10 | கடவுள் உடன்படிக்கை வரலாற்றை நம்பிக்கையுடன் ஆரம்பிப்பதைக் காட்டுகிறது. |
| ஆபிரகாமுடன் உடன்படிக்கை | தொ.நூ. 12:1-3,7 | நாடு, சந்ததி, ஆசீர் என்பன இறைவனின் வாக்குறுதி என்பதை அறிந்துகொள்வர். | தொ.நூ. 1:56<br>கலா. 3:29<br>எபி. 6:13-14 | கடவுளின் உடன்படிக்கை எதிர்நோக்கையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புகிறது |
| நோவாவுடன் உடன்படிக்கை | தொ.நூ. 9:8-17 | கடவுள், வெள்ளப்பெருக்கின் பின் படைப்பை பாதுகாப்பதற்காக கொடுத்த வாக்குறுதியை அனுபவத்தில் காண்பர். | தொ.நூ. 9:11<br>எசாயா 5:49<br>தி.பா. 145:13 | உடன்படிக்கை இரக்கத்தையும் பாதுகாப்பையும் காட்டுகின்றது. |
| இயேசுவும் மரியாளும் | லூக். 22:2-40<br>லூக். 24:1-47<br>யோவான் 2:1-11, 19: 26-28 | உடன்படிக்கை நிறைவேற்றத்தின் மையமாக இயேசுவும் மரியாளும் இருப்பதை காண்பர். | எபே. 1:14<br>கலா. 4:4<br>மத். 12:3 | கடவுளுடைய உடன்படிக்கை கிறிஸ்துவில் முழுமை அடைகின்றது என்பதை காட்டுகின்றது. |
| திருமண உடன்படிக்கை | மத். 1:96 | திருமணம் அன்பின் உடன்படிக்கை என்றும் பிரமாணிக்கத்திற்கு உரியது என்பதையும் புரிந்து கொள்வர். | எபே. 5:25<br>1கொரி. 1:38<br>மலா. 2:14 | கடவுளுடைய பிரமாணிக்கமான அன்பின் உடன்படிக்கையை பிரதிபலிக்கின்றது. |
| விசுவாச அறிக்கை | திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை | இயேசு கிறிஸ்துவிலும் அவரது மனுவுருவிலும் நம்பிக்கை ஆழப்படுத்துவார். | யோவான் 3:16<br>யோவான் 1:14<br>கொலோ. 1:15-16 | இயேசுவின் வாழ்விலும் பணியிலும் உடன்படிக்கை நிறைவடைகிறது. |
| உடன்படிக்கை செபம் | செக்கரியாவின் புகழ் பாடல் (லூக்.1:68 - 79) | கடவுளின் உடன்படிக்கை வாக்குறுதிகளுக்காக அவரை புகழ்வர். | லூக். 1:68<br>தி.பா. 3:41<br>புல. 3:22 | இறைவனுடைய இரக்கத்திற்கும் பிரமாணிக்கத்திற்கும் நன்றியுடையவராய் இருத்தல். |

# திருவிவிலிய வினாடி வினா - அட்டவணை

## தரம் 9 - கருப்பொருள்

## கடவுள் உடன்படிக்கைசெய்பவரும் திருஅவை தலைவரும்

| தலைப்பு | இறைவார்த்தைப் பகுதி | கற்றல் பெறுபேறு | மேலதிக வசனங்கள் | ஏன், காரணம் |
|---|---|---|---|---|
| மோசேயுடனான உடன்படிக்கை | வி.ப. 19:3-6 | இஸ்ரயேலருடனான கடவுளின் உடன்படிக்கை: புனிதத்துவத்திற்கான அழைப்பை விளங்கிக்கொள்வர். | “எனக்கு நீங்கள் குருத்துவ அரசராகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்...” வி.ப. 19:6 | கடவுள் தம் மக்களை வேறாக்கி, புனிதப்படுத்தும் திட்டத்தைக் காட்டுகின்றது |
| புதிய உடன்படிக்கை பற்றிய இறைவாக்கு | எரேமியா 31:31-34 | இதயங்களில் எழுதப்பட்ட சட்டம் கடவுளின் வாக்குறுதி: இது இயேசுவின் வருகைக்கான ஆயத்தம் என்பதை அறிவர். | “... என் சட்டத்தை அவர்களது உள்ளத்தில் பதிப்பேன் அதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன்” எரே. 31:33 | கடவுள் உள்ளாந்த மாற்றத்தையும் தன்னுடனான நெருக்கமான உறவையும் விரும்புகிறார். |
| கல்வாரி உடன்படிக்கை | 1கொரி. 11:23-26<br>லூக். 22:20 | நற்கருணையை புதிய உடன்படிக்கையாக அடையாளம் கண்டு அதை இயேசுவின் பலியோடு தொடர்புபடுத்துவர். | “இந்த கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலைபடுத்தப்படும் புதிய உடன்படிக்கை.” லூக். 22:20 | ஒவ்வொரு திருப்பலியும் கிறிஸ்துவின் மரணத்தைப் பறைசாற்றி அவரது மீட்பில் பங்குகொள்ளச் செய்கிறது. |
| மரியாள் உடன்படிக்கையின் பேழை | தி.வெளி. 11:19<br>லூக். 1:35<br><br>மத். 10: 1-4<br>லூக். 6:12-16 | மரியாளை பழைய ஏற்பாட்டு உடனபடிக்கையின் மாதிரியாக காண்பர். மரியாள் கீழ்ப்படிதலின் முன்மாதிரிகை. | “தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்.” லூக். 1:35 | மரியாள், உண்மையான உடன்படிக்கை பேழையான இயேசுவை சுமந்தார். இது கடவுளின் திட்டத்துடன் நம்பிக்கையுடன் இணைந்து செயல்பட கற்பிக்கின்றது |
| திருத்தூதர்களின் அழைப்பு | மத். 10:1-4<br>லூக். 6:12-16 | திருத்தூ துப் பணியை புரிந்துகொள்ளுதல். இறைவனின் அழைத்தலில் நிலைத்திருக்க செபமும் தெளிர்ந்து தேர்தலும் தேவை எனப் புரிந்துகொள்வர். | “இயேசு தம் சீடர் பன்னிருவரையும் அழைத்தார். ... அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்.” மத். 1:01 | திருத்தூதர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சியாயிருந்து திரு அவையில் அவருடைய பணியை தொடர்கிறார்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| குருத்துவ உடன்படிக்கை | தி.பா. 1:104<br>எபி. 5:1-10 | குருத்துவம் என்பது வாழ்நாள் உடன்படிக்கை என அறிந்து கொள்வர்: குருமார் மற்றும் ஆயரின் வகிபாகம். | "மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார் அவர் தம் மனதை மாற்றிக்கொள்ளார். தி.பா. 1:104 | ஆன்மீக அதிகாரம், பொறுப்பு மற்றும் உடன்படிக்கை சார்ந்த சேவையை முன்னிலைப்படுத்தல் முன்னிலைப்படுத்தல். |
| விசுவாச அறிக்கை பிரமாணங்கள் பகுதி 4, 5, 9 | திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை பகுதி 4, 5, 9 | விசுவாச பிரமாண பகுதிகளை மனப்பாடமாக விளக்கி கூறி அவற்றை உடன்படிக்கை வாக்குறுதிகளுடனும் திருஅவை பணிகளுடனும் தொடர்புபடுத்துவர். | "வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார்." யோவா. 1:14<br><br>"ஆதலால் நீங்கள் சென்று எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்" மத். 28:19 | கிறிஸ்து தூய ஆவி மற்றும் திரு அவை மீதான நம்பிக்கையை வலுப் படுத்துகின்றது.<br><br>நம்பிக்கையை செயலுடன் தொடர்புபடுத்துகின்றது. |
| செபம் - மரியாளின் புகழ்பாடல் | லூக். 1:45-55 | மகிழ்ச்சி மற்றும் நன்றியின் உடன்படிக்கைப் பாடலாக செபித்து இறைவனின் இரக்கத்தை அறிந்துகொள்வர். | "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது". லூக் 1:47<br><br>"வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்" | அன்றாட வாழ்வில் நன்றியுணர்வு, நம்பிக்கை மற்றும் உண்மையுள்ள கீழ்ப்படிதலை ஊக்குவிக்கிறது |

தரம் – 8

# உடன்படிக்கையாளரான கடவுள்

## I. திருவிவிலியம் - கடவுளின் வார்த்தை



**பிரதான பகுதி பழைய ஏற்பாடு**

- ஏதேன் தோட்ட உடன்படிக்கை - தொ.நூ. 3:9 - 15, 21
- ஆபிரகாமுடனான உடன்படிக்கை - தொ.நூ. 12:1 - 3, 7
- நோவாவுடனான உடன்படிக்கை - தொ.நூ. 9:8 - 17

**புதிய ஏற்பாடு**

- ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் - லூக் 2:22-40
- ஆலயத்தில் கண்டு பிடித்தல் - லூக். 2:41-47
- கானாவூர் திருமணம் - யோவான் 2:1-11
- கல்வாரியில் - யோவான் 19:26-28

**கற்றல் பெறுபேறுகள்**

- உடன்படிக்கை என்பது கடவுள் தன் மக்களுடன் செய்துகொள்ளும் தூய வாக்குறுதி என விளங்கிக்கொள்வர்.
- கடவுளின் உடன்படிக்கையை நிறைவு செய்வதில் மரியாள் மற்றும் இயேசுவின் மையப் பங்கை அறிந்துகொள்வர்.
- உடன்படிக்கை கதைகளையும் கிறிஸ்தவ வாழ்விற்கான அவற்றின் அர்த்தத்தையும் விளக்குதல்.

**மேலதிக மேற்கோள்கள்**

1. “உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகின்றேன் சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது.” - தொ.நூ. 9:11
2. “நானே உங்கள் கடவுள்! நீங்கள் என் மக்கள்!” - லேவியர் 26:12
3. “இந்த கிண்ணம் உங்களுக்காக சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைநிறுத்தப்படும் புதிய உடன்படிக்கை” - லூக். 22:20

இவ்வசனங்கள் கடவுளின் வாக்குறுதி, உறவு மற்றும் இயேசுவில் அது நிறைவேறுவதை சுருக்கமாக கூறுகின்றன.

## II. நம்பிக்கை அறிக்கை - விசுவாசப் பிரமாணம்

**பிரதான பகுதி திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை 2 மற்றும் 3 பகுதிகள்**

- பகுதி 2 “ஒரே மகனும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்”
- பகுதி 3 “இவர் தூய ஆவியால் உற்பவித்து கன்னி மரியாவிடம் பிறந்தார்”

**கற்றல் பெறுபேறுகள்**

- பகுதி 2 மற்றும் 3 ஐ விளக்கிக் கூறுவர்.
- கிறிஸ்துவிலும் மரியாவிலும் நிறைவேறிய உடன்படிக்கை வாக்குறுதிகளுடன் தொடர்புபடுத்துவர்.

**மேலதிக மேற்கோள்கள்**

1. “வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிக்கொண்டார்” - யோவான் 1:14
2. “காலம் நிறைவேறிய போது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்” - கலா. 4:4
3. “இதோ, கன்னி கருவுற்று ஒரு ஆண் மகவைப் பெற்றெடுப்பார்” - லூக். 1:22

இந்த வசனங்கள், இயேசு மனுவானதில் இறை உடன்படிக்கையின் வாக்குறுதிகள் நிறைவேறியதை பிள்ளைகள் காணச் செய்தல்.

## III. அருளடையாளம் - கிறிஸ்துவில் வாழ்க்கை

**பிரதான பகுதி: திருமணம் ஒரு உடன்படிக்கை – மத்தேயு 19:6**



**கற்றல் பெறுபேறுகள்**

- திருமணம் வெறுமனே ஒப்பந்தம் அல்ல. மாறாக ஒரு உடன்படிக்கை என்பதை புரிந்துகொள்வர்.
- கடவுள், தன் மக்கள் மீதான உண்மையான அன்பை பிரதிபலிக்கும் ஒன்றாக திருமணத்தைக் காணுதல்.

**மேலதிக மேற்கோள்கள்**

1. “கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்” - மத். 19:6
2. “திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள்” - எபே. 5:25
3. “அன்பு ஒரு போது அழியாது” - 1கொரி. 13:8

இந்த வசனங்கள் அன்பையும், உண்மைத் தன்மை மற்றும் ஒற்றுமையை அன்பின் உடன்படிக்கையின் அடையாளமாக காணச் செய்கின்றது.

## IV. செபம் - புகழ்பாடலும் நன்றிகூறலும்

- செக்கரியாவின் புகழ் பாடல் - லூக். 1:68 - 79

**கற்றல் பெறுபேறுகள்**

- உடன்படிக்கையின் மகிழ்வும் நன்றியுமாக செக்கரியாவின் பாடலை செபிப்பர்.
- கடவுளின் வாக்குறுதிக்கு நன்றி கூறி செபம் உருவாக்குவர்.

**மேலதிக மேற்கோள்கள்**

1. “இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில், அவர் தம் மக்களைத் தேடி வந்து விடுவித்தருளினார்” - லூக். 1:68
2. “ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன் அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும்” - தி.பா. 34:1
3. “ஆண்டவரது பேரன்பு முடிவுறவில்லை அவரது இரக்கம் தீர்ந்து போகவில்லை” - புலம். 3:22

கடவுளின் உடன்படிக்கையின் உண்மைத்தன்மையில் நம்பிக்கை, நன்றியுணர்வு மற்றும் மகிழ்ச்சியை இவை தூண்டுகின்றன.

### கற்றல், கற்பித்தலுக்கான பரிந்துரைகள்

- **கதை கூறுதல்** : பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகள், இயேசு மற்றும் மரியாளில் நிறைவேறிய உடன்படிக்கை.
- **காண் சாதனங்கள்** : வானவில் (நோவா), நட்சத்திரங்கள் - (ஆபிரகாம்), சிலுவை (புதிய உடன்படிக்கை)
- **அபிநய பாடல்** : செக்கரியாவின் புகழ்ச்சி பாடல் வடிவில்
- **ஆக்கச் செயற்பாடுகள்** :
  - வரைதல்: உடன்படிக்கை அடையாளங்களை வரைதல் (உ+ம் வானவில், திருமண மோதிரம்)
  - நடித்தல்: உடன்படிக்கை கதைகள்.
  - செபம்: கடவுளுக்கு வாக்குறுதியளிக்கும் தனிப்பட்ட செபங்களை எழுதுதல்.



## V. மதிப்பீடும் மீளாய்வும்

மொத்த புள்ளிகள்: 100


| பிரிவு | வகை | புள்ளிகள் |
|---|---|---|
| எழுத்து சுற்று | பல்தேர்வு வினாக்கள், இடைவெளி நிரப்புதல், குறு விடைகள் | 40 |
| மனனப்பகுதி சுற்று | செக்கரியாவின் புகழ்பாடல்/மேலதிக வசனங்கள் | 20 |
| கதை கூறல்/வரைதல் சுற்று | உடன்படிக்கை கதை அல்லது மரியாள் மற்றும் இயேசுவின் காட்சிகள் | 20 |
| கிரகித்தல் சுற்று | உடன்படிக்கை எனும் கருப்பொருளில் காரணம் சார்ந்த கேள்விகள் (ஏன், எதற்காக?) | 20 |

### பரிசில் திட்டம்

- தங்கம் — 85–100
- வெள்ளி — 70–84
- வெண்கலம் — 50–69
- சான்றிதழ் — 50க்கு மேல்

### மேலதிக மேற்கோள்களை வழங்குவதன் பயன்கள்

- மறைக்கல்வியின் உள்ளடக்கத்தின் நான்கு தூண்களினதும் கருப்பொருளின் ஒருமைப்பாட்டை பிள்ளைகளுக்கு அளிக்கிறது.
- சிறு மனனப் பகுதிகளை செபத்திற்கும் கற்றலுக்கும் வழங்குகின்றது.
- கடவுளின் அன்பின் உடன்படிக்கையை திருவிவிலியத்திலும் அருளடையாளங்களிலும் விசுவாச அறிக்கையிலும் புரிந்துகொள்ள உதவி அளிக்கிறது.



## தரம் 9:

# கடவுள், உடன்படிக்கை வழங்குபவரும், திருஅவைத் தலைவரும்

## I. திருவிவிலியம் - உடன்படிக்கைகளும் திருத்தூதர்களும்

**பிரதான பகுதி**

- மோசேயுடனான உடன்படிக்கை - வி.ப. 19:3 - 6
- புதிய உடன்படிக்கையின் முன்னறிவிப்பு - எரே. 31:31 - 34
- கல்வாரி உடன்படிக்கை - 1 கொரி. 11:21 - 26, லூக். 22:20
- மரியாள் - உடன்படிக்கையின் பேழை - தி.வெளி. 11:19, லூக். 1:35
- திருத்தூதர்களின் அழைப்பு/ திருத்தூதர்களை அழைத்தல் - மத். 10:1 - 4, லூக். 6:12 - 16

**கற்றல் பெறுபேறுகள்**

- பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு முழுவதும் கடவுளின் புனித வாக்குறுதியாகப் புரிந்துக்கொள்வர்

**ஏற்பாடுகள்**

- பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் முழுமை/நிறைவு இயேசுவிலும் மரியாவிலும் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திருத்தூதுப் பணிக்கும் இறைபணியின் உடன்படிக்கைக்கும் உள்ள தொடர்பினை விளங்கிக்கொள்வர்.
- புதிய உடன்படிக்கை பேழையாக மரியாவின் வகிபாகத்தை (பங்களிப்பை) மேன்மைப்படுத்துவர்.

**மேலதிக மேற்கோள்கள்**

1. “எனக்கு நீங்கள் அரச, குருத்துவ தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்” - வி.ப. 19:6
2. “என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன் அதை அவர்கள் இதயத்தில் எழுதி வைப்பேன்” - எரே. 31:33
3. “ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்” - 1கொரி. 11:26
4. “வானதூதர்கள் அவரிடம், தூய ஆவி உம்மீது வரும் உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்” - லூக். 1:35
5. இயேசு தம் சீடர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்தார். தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளை குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்” - மத். 10:1

இந்த பகுதிகள் கடவுளின் பிரமாணிக்கமான திட்டத்தையும், உடன்படிக்கை நிறைவேறுவதையும் தனது பணியில் பங்கெடுக்க அழைப்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

## II. நம்பிக்கை அறிக்கை - விசுவாசப் பிரமாணம்

**பிரதான பகுதி திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை 4, 5, 9 பகுதிகள்**

- பகுதி 4 மனுக்குலத்தின் மீட்பரும், கடவுளின் மகனுமான இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை
- பகுதி 5 வாழ்வு தரும் தூய ஆவியில் நம்பிக்கை
- பகுதி 9 ஒரே பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருஅவையில் நம்பிக்கை

**கற்றல் பெறுபேறுகள்**

- நம்பிக்கை அறிக்கையின் 4, 5 மற்றும் 9 பகுதிகளை விளக்கிக் கூறுவர்.
- நம்பிக்கை அறிக்கையில் இந்த அலகுகளை உடன்படிக்கை வாக்குறுதிகள் இயேசுவிலும் திருத்தூதரிலும் நிறைவேறியதில் தொடர்புபடுத்துவர்.
- திருஅவை, கடவுளின் உடன்படிக்கை திட்டமாக, தொடர்ச்சியாக உயிர்ப்புடன் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளல்.
- “வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிக்கொண்டது” - யோவான் 1:14

### மேலதிக மேற்கோள்கள்

- ஆகையால் நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்" - மத். 28:19
- "நீங்கள் கிறிஸ்துவின் உடல், ஒவ்வொருவரும் அதன் தனித் தனி உறுப்புக்கள்" - 1கொரி. 12:27

இந்த வசனங்கள் திருஅவையின் நம்பிக்கை, தூதுப்பணி மற்றும் உடன்படிக்கையின் தன்மையையும் புரிந்துகொள்ள வழிசெய்கின்றது.

## III. அருளடையாளம் - கிறிஸ்துவில் வாழ்க்கை

**பிரதான பகுதி: குருத்துவம் – திருப்பாடல் 110:4, எபிரேயர் 5:1 – 10**

**கற்றல் பெறுபேறுகள்**

- குருத்துவம் என்பது கடவுளுடனான வாழ்நாள் உடன்படிக்கை என புரிந்துகொள்வர்.
- குருக்களும் ஆயர்களும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கேற்பவர்கள் என அறிந்துகொள்வர்.
- திருத்தூதர் அழைப்பை, திருஅவையின் பணி மற்றும் பரிசுத்தப்படுத்தலுடன் தொடர்புபடுத்துவர்.



### மேலதிக மேற்கோள்கள்

1. "மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்" - தி.பா. 110:4
2. "தலைமை குரு ஒவ்வொருவரும் மனிதரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பாவங்களுக்குக் கழுவாயாக காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாக கடவுள் முன் பணிபுரிய ஏற்படுத்தப்படுகின்றார்" - எபி. 5:1
3. "என் ஆடுகளை பேணி வளர்" - யோவான் 21:17

இவ்வசனங்கள் குருத்துவத்தின் ஆவிக்குரிய பொறுப்பு, அதிகாரம் மற்றும் உடன்படிக்கைத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

## IV. செபம் - மரியாளின் பாடல்

**பிரதான பகுதி லூக்கா 1:46 – 55**

**கற்றல் பெறுபேறுகள்**


- மரியாளின் புகழ்ச்சிப்பாடலை, உடன்படிக்கையின் மகிழ்ச்சி, துதி மற்றும் நன்றிகூறும் பாடலாக செபிப்பர்.
- ஏழைகள் மற்றும் தாழ்ச்சியுடையோர் மட்டில், இறைவனின் பிரமாணிக்கத்தைத் தெரிந்துக்கொள்வர்.
- கடவுளின் உடன்படிக்கைத் திட்டத்திற்கு மரியாள் ஒரு விசுவாச கீழ்ப்படிதலின் முன்மாதிரிகையாக இருப்பதை காண்பர்.

### மேலதிக மேற்கோள்கள்

1. "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது" - லூக். 1:47
2. "...வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.." லூக். 1: 50-53
3. "மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார் தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்" - லூக். 1:54 - 55

இந்த வசனங்கள், இஸ்ரயேல் மக்கள் கடவுளின் உடன்படிக்கைத் திட்டத்திற்கு நன்றியுடனும், நம்பிக்கையுடனும் மற்றும் செயலூக்கத்துடனும் பங்கேற்றனர் என்பதை கற்பிக்கின்றன.

### கற்றல், கற்பித்தலுக்கான பரிந்துரைகள்




- ☼ **கதை கூறுதல் :** மோசேயுடன் உடன்படிக்கை, புதிய உடன்படிக்கைப் பற்றிய இறைவாக்கு, கல்வாரி, திருத்தூதரை அழைத்தல்
- ☼ **காண் சாதனங்கள்:** உடன்படிக்கை பலகை (விடுதலை பயணம்), சிலுவை, பேழை, திருத்தூதர்களின் அடையாளங்கள் (திறவுகோள், மீன், படகு)
- ☼ **ஆக்கச் செயற்பாடுகள் : –**
  - **வரைதல்:** உடன்படிக்கை பேழையான மரியாளை வரைதல்
  - **நடித்தல் :** திருத்தூதுப் பணி அல்லது இறுதி இராவுணவு உன்படிக்கையை
  - **செபம்:** மரியாளின் புகழ் பாடலிலிருந்து தனிப்பட்ட செபம் எழுதுதல்.
- ☼ **அபிநய பாடல் :** செக்கரியாவின் புகழ்ச்சி பாடல், மரியாளின் புகழ் பாடல்

## V. மதிப்பீடும் மீளாய்வும்

**மொத்த புள்ளிகள் : 100**

| பிரிவு | வகை | புள்ளிகள் |
|---|---|---|
| எழுத்துச் சுற்று | பல்தேர்வு வினாக்கள், இடைவெளி நிரப்புதல், குறு விடைகள் | 40 |
| மனனப்பகுதி சுற்று | மரியாவின் புகழ்பாடல்/மேலதிக வசனங்கள் | 20 |
| கதை கூறல்/வரைதல் சுற்று | உடன்படிக்கை கதை அல்லது மரியாள், திருத்தூதர்களின் காட்சிகள் | 20 |
| கிரகித்தல் சுற்று | உடன்படிக்கை எனும் கருப்பொருளில் காரணம் சார்ந்த வினாக்கள் (ஏன், எதற்காக?) | 20 |

### பரிசில் திட்டம்

- **தங்கம்** — 85–100
- **வெள்ளி** — 70–84
- **வெண்கலம்** — 50–69
- **சான்றிதழ்** — 50க்கு மேல்

### மேலதிக மேற்கோள்களை வழங்குவதன் பயன்கள்

- ☼ திருவிவிலியம், நம்பிக்கை அறிக்கை, அருளடையாளங்கள் மற்றும் செபம் ஆகியவற்றில் உடன்படிக்கை கருப்பொருளை மீண்டும் வலியுறுத்துகின்றது.
- ☼ மனனம் செய்து அதனை ஒப்புவிக்கவும் அதனை சிந்திக்கவும் வேண்டிய மனப்பாட வசனங்களை வழங்குகிறது.
- ☼ திருவிவிலிய அறிவை கிறிஸ்தவ நம்பிக்கையுடன் வாழ இணைக்கின்றது.